நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 90 /2025**

**P.W. 1 –ன் வாக்குமூலம்**

**( புகார்தாரர் தரப்பு சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சிவக்குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | ராஜு |
| கிராமம் | : | ஆண்டிக்கவுண்டர் நகர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 50 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 17–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.50PM.

1. நான் தற்போது ஆண்டிகவுண்டன் நகரில் குடியிருக்கிறேன். எனக்கு சொந்தமான வீட்டில் தான் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை சுமார் 6 வருடங்களாக எனக்கு தெரியும். எனது வீட்டிற்கும் எனது நிதிநிறுவனத்திற்கும் சுமார் 200 மீட்டர் இடைவெளி இருக்கும். நான் எனது நிதிநிறுவனத்தை கடந்த

8 வருடங்களாக நடத்தி வருகிறேன். முறையாக கணக்கு பராமரித்து ஆடிட்டர் வைத்து வருமான வரி செலுத்தி வருகிறேன்.

2. எனது நிதிநிறுவனத்தில் எதிரி இந்த வழக்கு சம்பந்தப்பட்ட தொகை மட்டும் தான் கடன் வாங்கியுள்ளார். 2024ம் வருடம் ஜூலை மாதம் என்னிடம் கடன் வாங்கியிருந்தார். எனது நிதிநிறுவத்தில் 100ரூபாய்க்கு ரூபாய் 1.50 என்ற விதத்தில் வட்டி வாங்கி வருகிறேன். எதிரி வாங்கிய ரூபாய். 9,50,000/க்கு மாதம் ரூபாய் 10,000/- என்ற விதத்தில் இரண்டு மாதம்தான் வட்டி கொடுத்தார். மாதம் ரூபாய் 13,500 வட்டியாக கொடுக்கவேண்டும். ஆனால் 10,000/-மாகத்தான் கொடுத்தார். அதன் பிறகு கொடுக்கவில்லை.

3. எனது நிதிநிறுவனத்தில் பணம் கடன் கொடுப்பதற்கு முன்பாக விண்ணப்பம் எழுதி வாங்கி கொண்டுதான் கடன் கொடுப்பது வழக்கம். அதனுடன் இரண்டு காசோலை, ஆதார் கார்டு நகல், நிறுவனத்தில் வேலை செய்து வந்தால் அதற்கான அடையாள அட்டை, சம்பள பட்டியல், மற்றும் பிராமிசரி நோட் மற்றும் ஒரு வெற்று பச்சை தாளில் ஒரு ரூபாய் ரெவன்யு ஸ்டாம் ஒட்டி கையெழுத்து வாங்கி கொள்வது வழக்கம்.

4. எதிரிக்கு பணம் கொடுக்கும்போதும் ஒரு பிராமிசரிநோட், மேற்கண்டவாறு கையொப்பம் இட்ட பச்சை தாள், ஆதார் கார்டு நகல், நிறுவன அடையாள அட்டை, சம்பள பட்டியல், ஆகியவற்றை வாங்கி கொண்டுதான் கடன் கொடுத்தேன். நான் பணத்தை திருப்பி கேட்கும்போது தான் காசோலை கொடுத்தார். இரண்டு காசோலைகளை எதிரிதான் எழுதி என்னிடம் கொடுத்தார். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட காசோலையில் ரூபாய் 9,50,000யை நிரப்பியும் மற்றொரு காசோலையில் கையெழுத்து மட்டும் போட்டு கொடுத்தார்.

5. என்னிடம் இன்னொரு காசோலையும், பிராமிசரிநோட்டும், கையொப்பம் இட்ட பச்சை நிற பேப்பர் என்னிடம்தான் உள்ளது. மேற்படி 3 ஆவணங்களையும் என்னால் நீதிமன்றத்தில் கொண்டு வந்து காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ 4 வழக்கறிஞர் அறிவிப்பு நான் கொடுத்ததுதான். நான் அனுப்பிய சட்ட அறிவிப்பில் நிதிநிறுவனத்தில் இருந்து பணம் வாங்கியதாக சொல்லவில்லை. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட தொகையை எனது வீட்டில் வைத்து வாங்கினார்.

6. நான் அனுப்பிய சட்ட அறிவிப்பில் எனக்கு வட்டி பாக்கி இருப்பது குறித்து நான் சொல்லவில்லை. நான் சட்ட அறிவிப்பு அனுப்பிய தேதி வரையிலான வட்டி தொகையை என்னால் சொல்ல முடியுமா என்றால் தோராயமாக ரூபாய் 70,000/– வரும். இரண்டு மாதம் 10,000 வட்டி தொகை கொடுத்தற்கு நான் ரசீது எதுவும் கொடுக்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட எனது தனிப்பட்ட தொகையாகும். எனது நிதிநிறுவனத்தில் ரசீது உள்ளது.
7. எனது நிதிநிறுவனம் பங்குதாரர் நிறுவனம் ஆகும். வாசு என்பவர் எதிரியை அழைத்து வந்து என்னிடம் பணம் வாங்கி கொடுத்தார். வாசு என்பவர் எனக்கு 30 வருடமாக பழக்கம். அவர் எல்ஐசி முகவராக வேலை செய்து வருகிறார். வாசு தனியாக கேரண்டராக பிராமிசரிநோட், காசோலை நான் சொன்னவாறு பச்சை நிற பேப்பர் ஆகியவற்றில் கையெழுத்து போட்டு கொடுத்துள்ளார். மேற்படி ஆவணங்களில் கையெழுத்தை தவிர விவரங்கள் எதுவும் நிரப்ப படவில்லை.
8. நான் அனுப்பிய சட்ட அறிவிப்பில் மேற்படிவாசு மேற்கண்டவாறு கேரண்டி கையெழுத்து போட்டதை பற்றி நான் சொல்லவில்லை. வாசு அறிமுகப்படுத்துவதற்கு முன்பாகவே எனக்கு எதிரியை தெரியும். எதிரியின் மகளும், எனது மகளும் வகுப்பு தோழிகள் ஆவார்கள். எதிரி கொடுத்த சம்பள பட்டியலில் எதிரிக்கு எவ்வளவு சம்பளம் குறிப்பிட பட்டிருந்தது என்று எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட பரிவர்த்தனை முன்பாக எதிரி என்னிடம் பணம் எதுவும் வாங்கவில்லை.
9. அடுத்த முறை நீதிமன்றத்திற்கு வரும்போது எதிரியிடம் இருந்த நான் வாங்கி வைத்த ஆவணங்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய தயாராக இருக்கிறீர்களா என்றால் ஆஜர் படுத்த தயாராக உள்ளேன்.

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.20PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**